2021 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

சுற்றுச்சுவர் கட்டுதல்

***511—முனைவர் T.R.B. ராஜா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மூவாநல்லூரில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மூவாநல்லூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி அமைந்துள்ள நிலம் பள்ளிக் கல்வித் துறையின் பெயருக்கு மாற்றம் செய்யப்படாமல் உள்ளது. அது பள்ளிக் கல்வித் துறையின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டவுடன், ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் மூவாநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டு கால போராட்டத்திற்குப் பிறகு, கடந்த ஒரே வாரத்தில் மன்னார்குடிக்கு பல திட்டங்களை அள்ளி அளித்திருக்கும் எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மூலக் கேள்விக்கு மிகவும் positive–ஆக பதில் அளித்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அதே பள்ளியில் இப்போது மாணவர், மாணவியர்களுக்குக் கழிப்பறை வசதிகள் சரியாக இல்லாமல் இருக்கின்றன. அதையும் அவர்கள் செய்துதர வேண்டும். கட்டக்குடி, புலவராயன்குடிக்காடு, பூவனூர், காரக்கோட்டை ஆகிய உயர்நிலைப் பள்ளிகளுக்கும், பரவாக்கோட்டை, முன்னாள்கோட்டை, கருவாக்குறிச்சி, ஆலங்கோட்டை, பைங்காநாடு, பொதக்கடை, ராயபுரம், பாளையங்கோட்டை ஆகிய மேல்நிலைப் பள்ளிகளுக்கும் சுற்றுச்சுவர்களும், சரியான வகுப்பறைகளும் இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. 2011 ஆம் ஆண்டிலும்கூட மிகவும் திடமாக கழகத்தின் பக்கம் நின்ற ஊர் எங்கள் மன்னார்குடி; எங்கள் பெருமை வாய்ந்த மன்னார்குடி என்பதை நன்கு மனதில் ஏந்தி, மாண்புமிகு முதல்வர் அவர்களின் மக்கள் ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையும் செய்து தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மூவாநல்லூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியின் மொத்த நிலப்பரப்பு 3,414 சதுர மீட்டர். இதில் 8,450 சதுர மீட்டர் பரப்பளவு விளையாட்டு மைதானமாக உள்ளது. இப்பள்ளியில் 128 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 3 வகுப்பறைகள், ஓர் அறிவியல் ஆய்வகம், 2 அலகு மாணவர் கழிவறை, 1 அலகு மாணவியர் கழிவறை, 1 அலகு மாற்றுத் திறனாளி கழிவறை, 30 மீட்டர் சுற்றுச் சுவர் மற்றும் குடிநீர் வசதி ஆகியவை மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமானதாக உள்ளது. இப்பள்ளியில் 10 ஆசிரியர்கள், மாணவ, மாணவியருக்குக் கல்வி கற்பித்து வருகிறார்கள். மூவாநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளி அமைந்துள்ள நிலம் பள்ளிக் கல்வித் துறையின் பெயருக்கு மாற்றம் செய்யப்படாமல் உள்ளது. அதனை பள்ளிக் கல்வித் துறையின் பெயருக்கு மாற்றம் செய்தவுடன், நபார்டு திட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதாவது திட்டத்தின்கீழ் மூவாநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள்.

2021 ஆகஸ்ட் 31]

முற்பகல் 10–35

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மன்னார்குடி சுற்றுவட்டாரப் பகுதிகளில் பல பள்ளிகள் இருந்தாலும்கூட, மாணவர்களுக்குச் சரியான நூலகம் இல்லாமல் இருக்கிறது. நாட்டிலேயே முதல் நடமாடும் நூலகம் அக்டோபர் 21 ஆம் நாள் 1931–ல் எங்கள் ஊரில் துவங்கப்பட்டது. திரு. கனகசபை பிள்ளை அவர்களின் முயற்சியினால்* Father of Library Science *என்று அழைக்கப்பட்ட டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்களின் தலைமையில் எங்கள் பெருமை வாய்ந்த மன்னார்குடியில்தான் நாட்டிலேயே முதன்முதலில் நடமாடும் நூலகம் துவங்கப்பட்டது. அந்த வழியில் நம்மையெல்லாம் ஆளாக்கிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பெயரில் நீங்கள் இப்பொழுது அற்புதமாக மதுரையில் ஒரு* Digital library*–ஐ கட்டப்போகிறீர்கள். அதேபோன்று, ஓரளவிற்குச் சிறியதாக, எங்கள் மன்னார்குடிக்கும் நல்ல ஒரு* Digital library*–ஐ கட்டித் தர வேண்டும்.* I.A.S., I.P.S., *தேர்வுகளுக்கெல்லாம் படிக்கக்கூடிய மாணவர்களுக்குச் சிறப்பான* e–Books *உள்ளிட்ட வசதிகளுடன்கூடிய ஒரு* e–Library*–ஐ தனியாக நீங்கள் அங்கே கட்டித் தர வேண்டுமென்ற அந்த மக்களின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக ஏற்பாரென்ற நம்பிக்கையுடன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், துணைக் கேள்விக்கும் சம்பந்தமில்லையென்று சொன்னாலும், அது எங்களுடைய துறையின்கீழ் வருகிறதென்ற அடிப்படையில் பதிலளிக்கிறேன். கண்டிப்பாக அவர் சொன்னது* correct *தான். திரு. கனகசபை பிள்ளை அவர்கள்தான் முதன் முதலில் நடமாடும் நூலகத்தை நடைமுறைப்படுத்தியவர். மேலும், அந்தத் தொகுதியில்தான் நடைமுறைப்படுத்தியிருக்கிறார். கண்டிப்பாக நிதிநிலைமைக்கேற்ப நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அது பரிசீலிக்கப்படும். இதுமட்டுமல்ல; தொடர்ந்து இதுவரைக்கும் இந்த அவையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் சுற்றுச் சுவர்*

மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்கு குரல் எழுப்பியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, கொளத்தூர் தொகுதியைச் சார்ந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திலிருந்தும், அதேபோன்று சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த அண்ணன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் தொடர்ந்து அதை வலியுறுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். ஜி.கே.எம். காலனியில் ஓர் அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கின்றது. அங்கே இருக்கின்ற அடிப்படைக் கட்டமைப்புகளை (infrastructure) சீர்செய்ய வேண்டிய ஒரு நிலை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோன்று, நம்முடைய சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அரசுப் பள்ளியில் maintenance and repair work–ஐ செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு தி.நகர் சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு தருமபுரி சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் கட்டடங்கள் சம்பந்தமாகவும், சுற்றுச்சுவர் சம்பந்தமாகவும் தொடர்ந்து பல கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் பொருந்தும்விதமான பதில்தான் இது. NABARD அல்லது DRDA அல்லது எந்தத் திட்டத்தின்கீழாவது நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா அவர்கள் சொன்னதுபோல, உங்களுடைய நிதியிலிருந்துகூட நீங்கள் நிதி கொடுக்கலாம். MP fund release–ஆனால், அதையும்கூட இப்போது நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆக, அந்த வகையில் தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, நீங்கள் கேட்டிருக்கின்ற கோரிக்கைகள் ஒவ்வொன்றும் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், எனது தொகுதிக்குப்பட்ட நன்னிலம், வலங்கைமான் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில்

2021 ஆகஸ்ட் 31]

1,000 பெண்கள் படிக்கிறார்கள். அந்தப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டித் தரப்படுமா எனவும், அதேபோல, கடந்த ஆண்டு தரமுயர்த்தப்பட்ட . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், துணைக் கேள்வி ஒரே கேள்விதான். சுற்றுச் சுவர் கட்டப்படுமா என்ற கேள்வியுடன் முடியுங்கள்.*

திரு. இரா. காமராஜ்: *தென்கோலவேலி பள்ளிக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படுமா எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் அண்ணன் சட்டமன்ற உறுப்பினர் திரு. காமராஜ் அவர்கள் சொன்னதுபோல, வலங்கைமான் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும், இன்னொரு பள்ளிக்கும் கேட்டிருக்கிறார்கள். அதையும் நாங்கள் சரிசெய்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு, ஆலங்குளம் கல்லூரிக்கு புதிய கட்டடங்கள் இந்த ஆண்டே 11.33 கோடி ரூபாய் நிதியில் கட்டப்படும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். நீங்களும் அதே மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி அவர்கள். ஒரே ஒரு துணைக் கேள்வி மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் முதன்மைக் கல்வி*

அலுவலகத்தின்கீழ் இயங்கும் குழித்துறை கல்வி மாவட்டம், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், விளாத்துறை ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள மாராயபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச்சுவர், ஆய்வகம் போன்ற கட்டடங்கள் அவசியம் தேவைப்படுகின்றன. எங்கள் நிதியையும் அதில் இணைத்துக் கொண்டு, நிச்சயமாக அந்தப் பணிகளை அரசுடன் இணைந்து செய்வதற்குத் தயாராகயிருக்கிறோம். இந்த உயர்நிலைப் பள்ளியில் குறிப்பாக, விளாத்திவிளை, வேப்பிளாவிளை, பாறைக்காவிளை, அஞ்சாலிகடவு போன்ற சிறு கிராமங்களில் உள்ள ஏழைக் குழந்தைகள் படிக்க வருகிறார்கள். இந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த, PTA சார்பில் 2 இலட்சம் ரூபாய் Endowment fees–ம் கட்டப்பட்டிருக்கிறது. எனவே, தரமுயர்த்தித் தந்து, பிற வசதிகளையும் அரசு செய்து தர வேண்டும். நாங்களும் இணைந்து இதோடு எங்கள் நிதியில் உங்களோடு பயணிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்து, அரசு தரமுயர்த்தித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பள்ளிகளைத் தரமுயர்த்துவதுபற்றி பல சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொன்றிற்கும் சில conditions இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்குப் பத்தாம் வகுப்பில் குறைந்தபட்சம் 100 மாணவர்களாவது இருக்க வேண்டும்; கிராமப்புறப் பகுதி எனும்போது சுமார் மூன்று ஏக்கர் நிலம் தேவைப்படும். பேரூராட்சிப் பகுதி என்றால் ஒரு 1 ஏக்கர், நகராட்சிப் பகுதி என்றால் 10 கிரவுண்டு, மாவட்டத் தலைமையிடம் என்றால் 8 கிரவுண்டு, மாநகராட்சிப் பகுதி என்றால் 6 கிரவுண்டு இடம் தேவைப்படுகிறது. மேற்கூறிய conditions–ஐ meet out செய்யும்போது கண்டிப்பாக துறையைச் சார்ந்திருக்கின்ற Officers, CEOs மூலமாக கருத்துருக்களையெல்லாம் பெற்று அதற்கான நடவடிக்கைகள் கண்டிப்பாக மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைவாக, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுக்கே மைக் கிடைக்கவில்லையா? மைக்கை* on *செய்துகொடுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள். மைக்கிலிருந்து சத்தம் வரவில்லை. மாண்புமிகு கொறடா அவர்களின் மைக்கிலிருந்து பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி *(***பேரவைத் துணைத் தலைவர்***)***:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டுவது தொடர்பாக, ஆரம்பப் பள்ளிகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் சுற்றுச் சுவர் கட்டிக்கொடுக்கப்படுகிறது. ஆனால், நபார்டு திட்டத்தின்மூலம் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டப்படும் கட்டடங்களுக்கு, ஊராட்சித் துறை அதற்கான அனுமதியை அளிப்பதில்லை. ஆகவே, 100 நாள் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் சுற்றுச் சுவர் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்.* MGNREGS *திட்டத்தின் மூலமாகவும் நீங்கள் கட்டித்தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களிடம் கலந்துபேசி, நபார்டு மூலமாகவும்,* DRDA *மூலமாகவும் கட்டுவதற்கு கண்டிப்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]